THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுபற்றி தனியாக கேள்வி கேட்க வேண்டும்.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்தப் பண்ணையிலே ஒரு முக்கியமான விஷயம், " ஆப் ஸீஸனிலே " அதாவது மற்ற இடங்களில் காய்க்காத நேரத்திலே இந்த இடத்திலே மாங்காய் காய்க்கிறது. இந்த இடத்திலே தற்சமயம் 50 எகருக்கும் குறைவாக நிலம் இருக்கிறது. இங்கே நிலத்தின் விலையும் செண்டு ஆயிரம் ரூபாய்க்கு மேல் உயர்ந்து கொண்டே போகிறது. ஆகையால், உடனே இந்த இடத்தில் மேலும் இதற்காக நிலத்தை வாங்குவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பத்து எகர் நிலம் " அக்வைர் " செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI A. R. SUBBIAH MUDALIAR : மந்திரி அவர்கள் உப கேள்விக்கு பதில் அளிக்கும்போது, இது விஷயமாக ஒரு திட்டம் தயாரிக்கப் பட்டிருப்பதாகச் சொன்னார்கள். எந்தெந்த ஜில்லாவிற்கு எந்தெந்த திட்டம் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுபற்றி தனியாக கேள்வி போட்டால், சொல்லலாம்.

Government of India Publications

* 520 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any provision for the purchase and distribution of publications brought out by the Government of India;

(*b*) if so, what the publications purchased are ; and

(*c*) how they were distributed?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes.

(*b*) The following are the names of Government of India publications purchased recently :—

1. Second Five Year Plan—Questions and answers.
2. Food and Agriculture.
3. Sorrow turned prosperity.
4. Towards a Socialist Order.
5. The First and the Second Five-Year Plans.
6. The Community Project Programme.
7. Industry.
8. Life Lines of the Nation.

(*c*) The publications were distributed to the District Publicity Officers and Information Centres for sale.

SRI K. SATTTANATHA KARAYALAR : இப்படி வாங்கக்கூடிய பிரசுரங்கள் ஒவ்வொரு ஆண்டுக்கும் பரிசீலனை செய்து வாங்கப் படுகிறதா ? அல்லது நிரந்தரமாக அவர்கள் பொதுவாக வெளியிடும் பிரசுரங்கள் அத்தனையும் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ? ஒவ்வொரு மாவட்டத்திற்கு எத்தனை பிரசுரங்கள் வீதம் இவைகள் விநியோகிக்கப்படுகின்றன ?

3rd March 1959]

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு செலவாகிறது என்பதைப் பொறுத்துத்தான் இந்த பிரசுரங்கள் மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகின்றன. அவர்கள் வெளியிடுகின்ற பிரசுரங்களின் ஜாபிதாவை நமக்கு அனுப்புகிறார்கள். அவைகளில் எவைகள் அவசியமானதோ, அவைகளை அதிகமாக வாங்குகின்றோம். குறைவாக வாங்கப்படும் பிரசுரங்கள் விற்கின்ற அளவுக்குத்தான் வாங்கப்படுகிறது. இவைகள் விலை இல்லாமல் வாங்கி விநியோகம் செய்யப்படுவதில்லை. விலைக்கு விற்கப்படுவதினால், எந்த அளவுக்கு "டிமாண்டு" இருக்கிறதோ, அந்த அளவுக்கு வாங்குகிறோம்.

SRI A. A. RASHEED : Sir, what is the amount spent in the purchase of these publications in the year 1957 and 1958?

THE HON. SRI C. SUBRAMANIAM : Because they are being sold, there is no question of any amount being sanctioned. It may be that we have to incur small expenditure in respect of purchases left over without being sold. But I cannot say definitely the amount.

SRI K. ANBAZHAGAN : இந்தப் பிரசுரங்கள் மத்திய சர்க்காரினால் வெளியிடப்படுபவை. மாகாண சர்க்கார் அவற்றின் கருத்துக்களை பொது மக்களிடம் பரப்ப வேண்டும் என்பதற்காகத்தான் அவைகளை வாங்கி விற்கிறார்களா ? அல்லது வியாபார குறிக்கோளோடு, மத்திய சர்க்காருக்கு உதவி செய்வதற்காக வாங்கி விற்கிறார்களா ? கருத்துக்களை பரப்புவதற்காக வாங்கி விற்கப்படுகிறது என்றால், அவைகள் சட்ட - மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படவேண்டியது அவசியம் என்று அமைச்சர் அவர்கள் கருதுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது வியாபார விஷயம் அல்ல. இதிலே இருக்கக்கூடிய விஷயங்களை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இவைகள் விநியோகிக்கப்படுகின்றன. அசெம்பளி மெம்பர்களுக்கு வழங்குவதுபற்றி தனியாக ஆலோசனை சொன்னால், அதுபற்றி கவனிக்கப்படும். இப்பொழுது அவர்களே வாங்குவதிலே தடையில்லை.

SRI K. VINAYAKAM : Is the Minister aware of the fact that there is a report issued by the Government and the Commission appointed by them and headed by Kaka Saheb Kalelkar regarding backward classes and will that report be made available, by purchasing from the Central Government and distributing to Members of this House?

MR. SPEAKER : It does not arise from the main question. If the Minister is prepared to answer, I have no objection.

SRI A. GOVINDASAMY : இந்தப் பிரசுரங்களை மத்திய அரசாங்கத்தினிடமிருந்து நம்முடைய ராஜ்ய அரசாங்கம் வாங்கி விற்பதாகச் சொன்னார்கள். அதிலே லாபம் எவ்வளவு, நஷ்டம் எவ்வளவு ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதிலே லாப நஷ்டக் கணக்கு ஒன்றும் சொல்லுவதற்கு இல்லை. இதிலே கொஞ்சம் கமிஷன் கொடுக்கிறார்கள். ஆகக்கூடிய செலவிற்கும், அதற்கும் சரியாகப் போய்விடும்.

Backward and most backward classes

* 521 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா :—

(அ) பின்னிலை, மிகவும் பின்னிலை போன்ற வகுப்பாளர்களாகப் பிரித்து அரசாங்க மூலம் உதவி அளித்து வருவதுபற்றி மத்திய சர்க்